بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**எவருடைய வீட்டில் விருந்தாளிகள் வருகின்றனரோ அவர்கள் இரவில் வீணான விஷயங்களில் நேரத்தை கழிப்பதற்கு பகரமாக இந்த நாட்களில் அதிகமதிகமாக அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பேச்சுக்கள் பேசப்பட வேண்டும். நல்ல விஷயங்கள் பேசப்பட வேண்டும். மேலும் நல்ல விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.**

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14.08.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் அருளால் அடுத்த ஜுமுஆவில் இருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் பிரித்தானியாவின் ஜலஸா ஸாலானா ஆரம்பமாகின்றது. இன்ஷா அல்லாஹ். ஜலஸாவின் ஏற்பாடுகளுக்காக ஒரு சில வாரங்களாக தன்னார்வ பணியாளர்கள் ஹதீகத்துல் மஹ்தி செல்கின்றார்கள். மேலும் கடந்த ஒரு வாரம் பத்து நாட்களாக முழுமையான முறையில் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் பிற பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். காட்டில் ஜலஸா நடத்துவதற்கு அனைத்து வகையான ஏற்பாடுகளையும் செய்வது சாதாரண விஷயமல்ல. ஆனால், நம்முடைய நாடு பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரக்கூடிய குத்தாம் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் எப்படிப்பட்ட திறமையுடன் இந்த பணியை செய்கின்றார்கள் என்றால் இதே போன்ற உதாரணம் உலகில் வேறெங்கும் தென்படுவதில்லை. ஐக்கிய நாடுகள் சபை போன்ற எந்தவொரு அமைப்பிலும் (தென்படுவதில்லை).

ஆக, இதுவும் அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு அல்லாஹ் இளைஞர்கள் மற்றும் பணி செய்யக்கூடியவர்களில் உருவாக்கியிருக்கின்ற உணர்வாகும். மழையாக இருந்தாலுமோ அல்லது வெயிலாக இருந்தாலுமோ இந்த இளைஞர்கள் அவைகளை பொருட்படுத்தாமல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஜலஸாவிற்காக எந்நேரமும் தன்னலமின்றி பணியாற்றுகின்றார்கள். ஏற்பாடுகளை செய்கின்றனர். பிறகு ஜலஸாவின் நாட்களில் மேலும் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் விருந்தினர்களுக்கு தொண்டு செய்தல் மற்றும் ஜலஸாவின் பணிகளை சிறந்த முறையில் செய்வதற்கு தன்னுடைய தொண்டுகளை வழங்கியவாறு வந்துவிடுவார்கள். அதன் பிறகு இந்த பணியை நிறைவடையச் செய்வதற்காகவும் அனைத்து பொருட்களையும் பாதுகாப்பதற்காகவும் ஒரு நீண்ட காலம் பணியாற்ற வேண்டியதிருக்கிறது. இந்த பணியாற்றுபவர்களில் இன்ஷா அல்லாஹ் ஆண்களும் வருவர். பெண்களும் வருவர். அல்லது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்களும் இருக்கிறார்கள். சிறுவர்களும் இருக்கிறார்கள். சிறுமிகளும் இருக்கிறார்கள். குழந்தைகளும், முதியவர்களும் இருக்கிறார்கள்.

ஆக, இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த ஜமாஅத்தைத் தவிர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்கான அசாத்தியமான உணர்வு வேறெங்கும் தென்படுவதில்லை. இந்த மேற்கத்திய நாடுகளில் உலகத்தை சம்பாதிப்பது மற்றும் உலக விவகாரங்களில் மூழ்குவது அனைவரிடமும் இருக்கின்றது. ஒருசிலரைத் தவிர. ஆனால், அஹ்மதி இளைஞர்கள் பணிவுடன் தன்னார்வ தொண்டாற்றுகின்றனர். ஆக, நாம் தொடர்ந்து பணியாளர்களுக்காக துஆ செய்வது நம்முடைய கடமையாகும். அல்லாஹ் அவர்களுக்கு சிறந்த முறையில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்கும் அதே வேளையில் எப்போதும் அவர்களை எல்லா வித தீங்கிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பானாக.

இப்போது நான் நடைமுறைக்கேற்ப விருந்து உபசரிப்பு தொடர்பாக பணியாளர்களுக்கு ஒரு சில விஷயங்களை கூறுவேன். இது அவசியமுமாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று அனைத்து பணியாளர்களும் தன்னுடைய முழு முயற்சி மற்றும் கவனத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுகிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், சில புதிதாக இணையக் கூடியவர்கள் மற்றும் முதல் முறையாக தன்னுடைய தொண்டினை வழங்கக்கூடிய சிறுவர்களுக்காகவும், மேலும் பழைய பணியாளர்களுக்கு நினைவு கூறும் விதமாகவும் விருந்து உபசரிப்பு தொடர்பான இஸ்லாமிய போதனைகள் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறந்த முன்மாதிரி மேலும் அன்னாரின் உண்மை அடியாரின் செயல்கள் மேலும் அன்னாரின் அறிவுரைகள் போன்றவற்றை முன்வைப்பது அவசியமானதாகும். மேலும் இதை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டும் இருக்க வேண்டும். அதன் மூலம் விருந்து உபசரிப்பின் மிகச்சிறந்த தரத்தை நாம் நிலைநாட்டுபவர்களாக ஆக வேண்டும்.

அல்லாஹ் நமக்கு விருந்து உபசரிப்பின் முக்கியத்தை கூறியவாறு திருக்குர்ஆனில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் விருந்தினர்களைப் பற்றி கூறி இருக்கின்றான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் விருந்தினர் வந்த போது முதலாவதான மற்றும் உடனடியான நடவடிக்கை நல்வரவு கூறுவது மற்றும் நலமாக இருப்பதற்காக துஆ செய்வது போன்றவைக்கு பிறகு அவர்கள் காட்டிய நடவடிக்கை என்னவென்றால் உணவு தயார் செய்தார்கள். பிறகு ஹஸ்ரத் லூத் (அலை) அவர்களின் விருந்தினர்கள் தொடர்பாக அவர்களுக்கு இருந்த கவலை பற்றி வருகிறது. அதாவது என்னுடைய சமுதாயத்தினர்

விருந்தினர்களுக்கு துன்பம் இழைத்துவிடக்கூடாதே என்ற விருந்தினர்களின் பாதுகாப்பு பற்றிய கவலை இருந்தது.

ஆக, விருந்தினர்களின் துன்பம் பற்றிய கவலை இருக்க வேண்டும். மேலும் விருந்தினர்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அது விருந்து உபசரிப்பவரின் இழிவிற்கு காரணமாக அமைந்து விடுகிறது. ஆக, விருந்தினர்களுக்கு துன்பம் ஏற்படுதல் கண்டும் காணாமல் விடக்கூடிய சாதாரண விஷயமல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, எந்த வகையிலும் விருந்தினருக்கு ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டால் அது விருந்து உபசரிப்பவர் வெட்கப்படக்கூடியதற்கும் மற்றும் அவரின் இழிவிற்கும் காரணமாகின்றது. எனவே தான் இஸ்லாம் விருந்தினர்களுக்கு கண்ணியம் அளிக்க மிகவும் அறிவுறுத்தி இருக்கின்றது.

பெருமானார் (ஸல்) அவர்களின் அசாத்தியாமான சிறப்பம்சங்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு தென்பட்டன. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறங்கிய போது அன்னாரின் அச்சத்தைக் கண்டு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் இதுபோன்ற சிறப்பம்சங்களைக் கொண்டவரை அல்லாஹ் ஒருபோதும் கைவிட மாட்டான் என்று கூறினார்கள். அதில் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் தாங்கள் விருந்து உபசரிப்பின் பண்பில் எல்லையை அடைந்திருக்கும் போது அல்லாஹ் எவ்வாறு உங்களை வீணாக்கி விடுவான் என்பதாகும். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் ஒன்றோ, இரண்டோ, ஐந்தோ, பத்தோ அல்ல. நூற்றுக்கணக்கான மாறாக, அதைவிட அதிகமான உதாரணங்கள் இருக்கின்றன. அன்னாரின் விருந்தினருக்கு கண்ணியம் அளித்தல் மற்றும் விருந்து உபசரிப்பின் உயர் தரம் பற்றிய பல சம்பவங்கள் இருக்கின்றன. பிறகு தன்னுடைய சஹாபாக்கள் மற்றும் உம்மத்திற்கும் அன்னார் இந்த வழிமுறையை கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

அப்துல்லாஹ் பின் தோஃபா என்ற சஹாபி கூறுகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தின் போது பெருமானார் (ஸல்) அவர்களுடைய பங்கில் வந்த விருந்தினர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். அன்னார் எங்களை தன்னோடு தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வீட்டில் உண்பதற்கு ஏதும் இருக்கின்றதா என்று வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் நான் உங்களுக்காக வைத்திருக்கின்ற சிறிதளவு மைதாவில் சர்க்கரை சேர்த்து செய்த இனிப்பான உணவு இருக்கிறது என்று கூறினார்கள். அந்த நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். இந்த சிறிதளவு உணவு அன்னார் நோன்பு திறப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அதை பாத்திரத்தில் எடுத்து வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அதிலிருந்து சிறிதளவு எடுத்து வாயில் வைத்தார்கள். அநேகமாக ஒன்றிரண்டு வாய் சாப்பிட்டு இருப்பார்கள். மேலும் பிஸ்மில்லாஹ் கூறி விருந்தினர்களிடம் சாப்பிடுமாறு கூறினார்கள். இவர் கூறுகிறார். நாங்கள் அதை பார்க்காமலேயே அதை சாப்பிடுவது போன்று சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அனைவரின் பசியும் அடங்கி விட்டது. பிறகு குடிப்பதற்கு ஏதும் இருக்கின்றதா என்று அன்னார் வினவினார்கள். குடிப்பதற்காக சில பானங்களை கொண்டு வந்ததும் அதிலிருந்து சிறிதளவு குடித்தார்கள். பிஸ்மில்லாஹ் சொல்லி குடிக்குமாறு கூறினார்கள். பிறகு நாங்கள் அதை அருந்தினோம். பார்க்காததைப் போன்று குடித்தோம். பிறகு எங்களுடைய தாகம் முற்றிலும் தீர்ந்து விட்டது.

ஆக, அன்னாரின் விருந்து உபசரிப்பு இதுவாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் முதலில் ஏன் சாப்பிட்டார்கள் என்றால், சுவைத்தார்கள் என்றால் (மாறாக, சாப்பிட்டார்கள் என்று கூறக்கூடாது) துஆவிற்காக வாயில் வைத்திருப்பார்கள். அன்னாரின் துஆவின் அருளால் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். அவ்வாறே அனைவருக்கும் கிடைத்தது. இதே போல் துஆ செய்து சாப்பிடுவதில் அருள் ஏற்படுவது தொடர்பான பல்வேறு சம்பங்கள் இருக்கின்றன. அதிலிருந்து எவ்வாறு சிறிதளவு உணவினால் மக்கள் முற்றிலும் பசி தீர்த்தார்கள் என்பது பற்றி தெரிய வருகின்றது. சில சமயம் விருந்தினர்கள் சில கஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையையும் ஏற்படுத்தி விடுகின்றார்கள். எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றதென்றால் விருந்து உபசரிப்பவர் தன்னுடைய பொறுமையை இழந்து விடுகின்றார். ஆனால் அப்படிப்பட்ட தருணத்தில் கூட பெருமானார் (ஸல்) அவர்களுடைய வியப்பிற்குரிய முன்மாதிரி எவ்வாறு இருந்தது.

ஓர் சஹாபி பெருமானார் (ஸல்) அவர்களது விருந்தினருக்காக தன்னுடைய குழந்தைகளை தாலாட்டி பட்டினியாக தூங்க வைத்து விடுகின்றனர். தாங்களும் பசியுடன் இருக்கின்றனர். ஆனால், விருந்தாளிக்கு எவ்வித உணர்வும் ஏற்பட விடவில்லை. அடுத்த நாள் இந்த அன்ஸாரி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்த போது அன்னார் சிரித்தவாறு, உங்களுடைய இந்த உணவளித்த வழிமுறை எப்படியிருந்ததென்றால் இறைவனுக்கும் பிடித்து விட்டது என்று கூறினார்கள். இந்த விருந்து உபசரிப்பு அல்லாஹ்விற்கு எந்த அளவுக்கு பிடித்ததென்றால் அவன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் இது தொடர்பாக தெரிவித்தான். இந்த சஹாபாக்கள் தன்னை விடவும் தன்னுடைய குழந்தைகளை விடவும் விருந்தாளிகளுக்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர்களாக இருந்தார்கள். நிச்சயமாக இப்படிப்பட்ட மக்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை பெற்று ஈருலக அருட்களுக்கு வாரிசாகின்றனர். சஹாபாக்களில் இந்த உணர்வு பெருமானார் (ஸல்) அவர்களின் சிறந்த முன்மாதிரியை பார்த்து உருவானது. மேலும் அன்னாருடைய போதனைகளால் உருவானது.

ஒரு அறிவிப்பில் வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் தன்னுடைய விருந்தாளிக்கு கண்ணியமளிக்க வேண்டும்.

எவருடைய வீட்டில் விருந்தாளிகள் வருகின்றனரோ அவர்கள் இரவில் வீணான விஷயங்களில் நேரத்தை கழிப்பதற்கு பகரமாக இந்த நாட்களில் அதிகமதிகமாக அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பேச்சுக்கள் பேசப்பட வேண்டும். நல்ல விஷயங்கள் பேசப்பட வேண்டும். மேலும் நல்ல விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். சஹாபாக்கள் இந்த விஷயத்தை புரிந்ததனால் விருந்தினர்களுக்குரிய உரிமையை செலுத்திய அதே நேரத்தில் நான் கூறிய உதாரணத்தில் வந்திருந்த குழுவினருக்கு சிறந்த தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து அவர்களுக்கு சிறந்த உணவை அளித்த அதே வேளையில் அவர்களின் ஆன்மீக மற்றும் மார்க்க மற்றும் அறிவு ரீதியான உரிமைகளை செலுத்துவதற்கும் முயற்சி செய்தார்கள். அவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு

திரும்பி செல்லும் போது சிறந்த முறையில் தம்மைச் சார்ந்தவர்களுக்கு தர்பிய்யத் வழங்கவும் மேலும் சிறந்த முறையில் தமது பகுதியினுடைய மக்களுக்கு இஸ்லாத்தினுடைய தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்தார்கள்.

நம்முடைய அமைப்பிலும் தர்பிய்யம் மற்றும் தப்லீக்கின் துறைகள் இருக்கின்றன. ஜலஸாவின் நாட்களில் இதற்கான அணிகள் உருவாக்கப்படுகின்றன. பல்வேறு சமுதாயங்களோடும் இரவுகளில் கூட்டங்களும் நடைபெறுகின்றன. நம்மவர்களுக்கும் பிறருக்கும் ஆன்மீக உணவு வழங்குவதும் பணியாளர்களின் கடைமையாகும். அதற்கான ஏற்பாடும் சிறந்த முறையில் செய்யப்பட வேண்டும்.

ஆக, பணி செய்யக்கூடிய அனைவரும் இதை தன் கண்முன் வைக்க வேண்டும். நமது செயல் முன்மாதிரிகளும் விஷயங்களும் விருந்து உபசரிப்பின் அங்கமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தொண்டாற்றுவது மட்டுமல்ல. இதன் பக்கமும் இந்த நாட்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்த காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு விருந்து உபசரிப்பின் எப்படிப்பட்ட முன்மாதிரிகளை காட்டியுள்ளார்கள். மேலும் எவ்வாறு தர்பிய்யத் வழங்கியுள்ளார்கள் என்பதற்கான ஒரு சில உதாரணங்களையும் நான் உங்கள் முன்னால் எடுத்து வைக்கின்றேன். விருந்தாளிக்கு கண்ணியம் அளித்தல் மற்றும் மதிப்பளித்தல் தொடர்பான ஒரு சம்பவம்.

ஒரு முறை காதியானுக்கு வந்த ஒரு விருந்தாளி அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத்தும் செய்திருந்தார். சீடர் என்கின்ற ஒரு உறவும் இருந்தது. இந்த சீடர் என்ற உணர்வின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கால்களை அழுக்க ஆரம்பித்து விட்டார். அதே வேளையில் அறையினுடைய ஜன்னலையோ அல்லது கதவையோ ஒரு இந்து நண்பர் வந்து தட்டினார். இந்த சஹாபி கூறுகிறார். நான் எழுந்து ஜன்னலை திறக்க முற்பட்டேன். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக வேகமாக எழுந்து சென்று கதவைத் திறந்து, நீங்கள் எங்களுடைய விருந்தாளியாவீர்கள். விருந்தாளிகளுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

இங்கு பாருங்கள் இரு வகையாக நிலைகள் உள்ளன. சீடர் என்ற நிலைமை ஒன்றாகும். அதன் கீழ் அவரின் விருப்பத்திற்கேற்ப கால்களை அழுக்க அனுமதித்தார்கள். இரண்டாவது விருந்தாளியின் உரிமையை நிறைவேற்றுவதற்காக தன்னுடைய எஜமானரின் கட்டளையை முன்னிறுத்தியவாறு தன்னிடம் வந்த விருந்தாளிக்கு கண்ணியமளித்தார்கள். மேலும் புதிதாக வந்தவருக்கும் கண்ணியம் அளித்தவாறு தானே சென்று கதவை திறந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஒரு சம்பவத்தை கூறுகிறார்கள். ஒரு சிறந்த ஒழுக்கமுடைய, ஏழ்மை குணமுடைய அஹ்மதி சேட்டி குலாம் நபி சாஹிப் பின்டியில் கடை வைத்திருந்தார்கள். அவர் கூறுகிறார். ஒரு முறை நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திப்பதற்காக காதியான் வந்தேன். குளிர் காலமாக இருந்தது. மழையும் பெய்து கொண்டிருந்தது. நான் மாலை நேரத்தில் காதியான் வந்தடைந்தேன். இரவில் உணவு சாப்பிட்டுவிட்டு படுத்த பிறகு இரவு வெகு நேரம் கழிந்த பிறகு எவரோ ஒருவர் என்னுடைய கதவை தட்டினார். நான் எழுந்து கதவை திறந்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்முன் நிற்பதை கண்டேன். அன்னாரின் ஒரு கையில் சூடான பால் பாத்திரம் இருந்தது. இன்னொரு கையில் விளக்கு இருந்தது. நான் ஹுஸூர் அவர்களை பார்த்து பயந்து விட்டேன். ஆனால், ஹுஸூர் அவர்கள் மிகவும் கருணையுடன் எங்கிருந்தோ பால் வந்தது. நான் உங்களுக்கு தர வேண்டும். நீங்கள் இந்த பாலை அருந்துங்கள். ஒருவேளை உங்களுக்கு பால் அருந்துவதற்கான பழக்கம் இருக்கலாம் என்று கருதினேன். சேட்டி சாஹிப் அவர்கள் கூறி வந்தார்கள். என்னுடைய கண்களில் கண்ணீர் தழும்பியது. சுப்ஹானல்லாஹ். எப்படிப்பட்ட நல்லொழுக்கம் ! இறைவனின் தூய மஸீஹ் தன்னுடைய சேவகருக்கு தொண்டு செய்து எவ்வளவு இன்பத்தை அடைகின்றார் !

ஆனால், ஜலஸாவின் நாட்களில் ஏற்பாட்டு ரீதியிலான குறைபாட்டின் காரணமாக அன்னார் ஒரே உணவிற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். அதன் மூலமாக எவருக்கும் கஷ்டம் ஏற்படக்கூடாது. மேலும் அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். ஆனால், இன்றைய நாட்களில் அல்லாஹ்வின் அருளால் அன்னாருடைய ஜமாஅத் அமைப்பு ரீதியிலும் அதிகமாக பயிற்சி பெற்றதாக ஆகிவிட்டது. ஜமாஅத் அல்லாதவர்களுக்காகவும் குறிப்பிட்ட பகுதியை சார்ந்த மக்களுக்காகவும் அல்லது நோயாளிகளுக்காகவும் உணவு தயார் செய்யப்படுகிறது. இதில் எவ்வித கஷ்டமும் இல்லை. தவறும் இல்லை. தவறாக இருக்கவும் கூடாது. சிலர் தேவையில்லாமல் இதுபோன்ற கேள்விகளை எழுப்புகின்றனர். ஏன் தனியாக உணவு சமைக்கப்படுகிறது என்கின்றனர். அவர்களும் சகிப்புத்தன்மையை காட்ட வேண்டும்.

பிறகு அன்னாரின் காலத்தில் ஒரு முறை சில விருந்தாளிகளுக்கு சரியாக உணவு கிடைக்கவில்லை. ஏற்பாட்டாளர்களின் தவறின் காரணமாக அவர்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை. ஒரு சில விருந்தாளிகள் கவனிக்கப்படவில்லையென அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த சம்பவம் தொடர்பாக அறிவித்தான். அதனால் இரவில் லங்கர் கானாவில் பகட்டு செய்யப்பட்டிருக்கின்றது என்று இரவில் அல்லாஹ் எனக்கு அறிவித்தான் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். சிலருக்கு உணவு வழங்கப்பட்டது. சிலருக்கு உணவு வழங்கப்படவில்லை. சரியான முறையில் சேவை செய்யப்படவில்லை என்கின்ற காரணத்தால் அன்னார் லங்கர் கானாவில் பணியாற்றக்கூடியவர்களை ஆறு மாதங்கள் வரை பணி நீக்கம் செய்தார்கள். தண்டனையும் வழங்கினார்கள். அன்னார் மென்மையான இயல்பை உடையவராக இருந்தும் கூட அன்னாரின் விருந்தாளிகளுக்கு உபசரிப்பு செய்வதில் பகட்டு மற்றும் குறைபாட்டை அன்னாரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக அன்னார் பணியாளர்களுக்கு தண்டனை வழங்கினார்கள். பிறகு லங்கர் கானாவில் தன் கண் முன் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

ஆக, விருந்து உபசரிப்புத் துறை மிக அதிகமாக கவனத்துடன் இருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. விருந்து உபசரிப்பில் தங்குமிடத்திடத்திற்கான ஏற்பாடும் உள்ளது. பல்வேறு ஏற்பாடுகள் விருந்து உபசரிப்பின் கீழ் வருகின்றது. விருந்து

உபசரிப்பிற்கான சரியாக இருக்குமென்றால் பிற ஏற்பாடுகள் சாதாரணமானவையாகும். அவைகள் தாமே சரியாகி விடும். விருந்தாளிகளுக்கு மருத்துவ உதவி வழங்குவதும் விருந்து உபசரிப்பு ஆகும். ஜலஸாவின் பணிகளில் 80 சதவிகிதம் மாறாக அதைவிட நேரடியாக விருந்து உபசரிப்பில் வருகிறது என்று நான் கருதுகிறேன்.

எனவே, விருந்து உபசரிப்புத் துறைக்கான பேட்ஜ் அணிந்திருக்கின்றவர்களுக்கு மட்டுமே விருந்து உபசரிப்பு பொறுப்பு இருக்கின்றது என்று கருதக்கூடாது என்பதை ஒவ்வொரு பணியாளரும் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, எல்லா துறையுமே விருந்து உபசரிப்பின் துறையேயாகும். விருந்தாளிக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் அவர்களுக்கு கண்ணியம் அளிப்பது மற்றும் அவர்களை எல்லா வகையான கஷ்டங்களிலிருந்தும் பாதுகாப்பது ஒவ்வொரு பணியாளரின் கடமையாகும். அல்லாஹ் அனைத்து பணியாளர்களுக்கும் சிறந்த முறையில் இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. அல்லாஹ்வின் அருளால் ஜலஸாவும் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக இருக்கட்டுமாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய யூ.கே வின் ஹர்ஸ் ஃபீல்டின் ரபீக் ஆஃப்தாப் சாஹிபின் மகன் கமால் ஆஃப்தாப் அவர்களின் நற்பண்புகளை எடுத்துக் கூறினார்கள். மர்ஹூம் ஜனாஸா 2015 ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதியன்று லேக்கோமியா நோயின் காரணமாக 33 வயதில் வஃபாத்தாகி விட்டடார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இரண்டவாது ஜனாஸா ஜெர்மனியை சார்ந்த மதிப்பிற்குரிய முஷ்தாக் அவான் சாஹிப் அவர்களின் மகனான நயிம் அவான் சாஹிப் அவர்களுடையதாகும். தன்னுடைய 36 வது வயதில் அங்கு ஜெர்மனியிலுள்ள ரைன் நதியில் மூழ்கி வஃபாத்தானார்கள். அவர்களுடைய 12 வயது மகனும் மூழ்கிவிட்டான். தந்தை மகன் ஆகிய இருவரும் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். ஹுஸூர் அவர்கள் மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும் அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக. மேலும் இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. இவர்களுடைய மகள்களுக்கும் அவன் போதுமானவனாக இருப்பானாக என்று துஆ செய்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 14.08.2015
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516